**உ**

## குகமயம்

## வேலும் மயிலும் துணை

# நியுசிலாந்து திருமுருகன் திருப்பணிச்சபைத் தலைவரின் ஆண்டறிக்கை

## 29 புரட்டாதி 2019

எமது அழைப்பை ஏற்று இங்கு வருகை தந்திருக்கும் அனைவரையும் நியுசிலாந்து திருமுருகன் திருப்பணிச்சபையின் சார்பில் அன்புடன் வரவேற்கிறேன்.

### வருடாந்த மகோற்சவம் 2019

இந்த வருடமும் எமது கோயிலின் வருடாந்த மகோற்சவ விழா கனடாவிலிருந்து வந்த நாதஸ்வர மேளவாத்திய இசையுடன் மிகச் சிறப்பாக நடைபெற்றது. பிரசித்திபெற்ற நாதஸ்வர வித்துவான் பஞ்சாபிகேசனின் வாரிசான திரு நாகேந்திரன் நாதஸ்வரம் வாசிக்க திரு பழனிவேல் ஜெகதூஸ்வரன் அவர்கள் தவில் வாசித்தார். இவ் இசையைக் கேட்கவும் பக்தர்கள் கூட்டம் நிரம்பியது. இதேபோன்று 2020ம் ஆண்டுக்குரிய திருவிழாவையும் நடத்த எமது திருப்பணிச்சபை ஏற்பாடுகளைச் செய்து வருகின்றது. இந்த வருடம் வழங்கிய ஒத்துழைப்பை அடுத்த வருடமும் வழங்கி எமது திருவிழாவை சிறப்பாக நடைபெற உதவுமாறு அனைவரையும் அன்புடன் வேண்டிக்கொள்கிறோம்.

### வேலைகள் முடிவுற்ற சான்று பத்திரம் (CCC)

நமது கோயிலின் கட்டிட வேலைகள் முடிவுற்ற சான்று பத்திரத்தை (CCC) பெறுவதற்காக ஜூன் 2018 விண்ணப்பித்திருந்தோம். Council 16 ஒக்டோபர் 2018 அன்று சான்று பத்திரத்தை எமக்கு கையளித்தார்கள். இந்த விடயம் எமது ஆலய வரலாற்றில் ஒரு மைல்கல் என்றே கூறலாம்.

### சமூக மண்டப வேலைகள்

இன்னமும் சமூக மண்டபத்தில் சமையலறை மற்றும் சமூக மண்டப மேம்பாட்டு வேலைகள் முடிவடையாமல் இருக்கிறது. இதற்கான வரைபடங்களை ஆய்த்த படுத்தும் மற்றும் நிதி சேர்க்கும் திட்ட வேலைகளில் ஈடுபட்டுள்ளோம்.குறைந்தபட்சமாக இப்பணியினை நிறைவேற்ற டொலர்

இரண்டரை லட்சம் தேவைப்படுகிறது. இத் தெய்வீகப்பணி நிறைவேற உங்கள் அனைவரது பேராதரவை நாடி நிற்கின்றோம்.

## இளையோரின் பங்களிப்பு

நமது இளையோர்களும் சிறுவர் சிறுமியர்களும் எமது கோயிலின் வருடாந்த நிகழ்ச்சிகளான பண்ணும் பரதமும்,முத்துச்சரம்,இன்னிசைத் தென்றல் ஆகியவற்றில் கலந்து சிறப்பித்தார்கள்.வெள்ளிக்கிழமை மாலை நேரப் பூசையின் போது திருமுறைகள் பாடி எமது சமய பண்பாட்டை பின்பற்றுகிறார்கள். இவ்வாறாக எமது இளையோர் சங்கீதம்,விளையாட்டு நிகழ்ச்சிகளில் பங்குபற்றி அவர்கள் உடல் ஆரோக்கியத்தையும் மனவளர்ச்சியையும் வளர்த்துக்கொள்கிறார்கள். மற்றும் கோயிலில் நடைபெறும் முக்கிய பூசைகளில் கலந்துகொண்டு பிரசாதம் வழங்குதல் நிகழ்ச்சிகளின் பின் கோயிலை சுத்தபடுத்தல்,அலங்கரித்தல்,எமது ஆலய உணவு பொட்டலங்கள் விநியோகம் மற்றும் வலைத்தள அபிவிருத்தி என்பவற்றில் முக்கிய பங்காற்றுகிறார்கள். மேலும் இளைஞர்கள் எமது கோயிலின் நிர்வாக சபையிலும் சேர்ந்து வருங்காலங்களில் எமது கோயிலுக்கு தொண்டாற்ற வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன்.

## நிதி சேர்க்கும் நடவடிக்கைகள்

எமது ஆலய வளர்ச்சிக்கு நிதி சேர்க்கும் முகமாக பல முயற்சிகளை எமது திருப்பணிச்சபை ,இளையோர்கள் ,சிறுவர் சிறுமியர்கள் மற்றும் தொண்டர்கள் செய்து வருகிறார்கள்.

1. உணவு பொட்டலங்கள் விநியோகம்
2. தீபாவளி உணவு திருவிழா
3. பண்ணும் பரதமும்
4. முத்துச்சரம்
5. இன்னிசைத் தென்றல்

இந்த நடவடிக்கைகளின் வெற்றிக்கு காரணமாக இருந்த அனைவருக்கும் திருப்பணிச்சபை நன்றி கூற கடமைப்பட்டுள்ளது

## ஆலய குருக்கள்

எமது அன்புக்கும் மதிப்புக்கும் உரிய பிரம்மஸ்ரீ ரா.ராஜேஸ்வர குருக்கள் ஐயா தனது 20 வருட நியுசூலாந்து திருமுருகன் இறை சேவையை நிறைவு செய்து ஆலய நித்திய பூஜைகளில் இருந்து 14 நவம்பர் 2018 முதல் ஒய்வு பெறுவதாக முடிவெடுத்து எமக்கு அறிவித்தார். அவர் திருமுருகன் ஆலயத்திற்கு அளித்த சேவையை நாம் மனமார பாராட்டுகிறோம்.

திருப்பணிச்சபை பிரம்மசிறி மயூரநாதக் குருக்கள் அவர்களை பிரதம குருக்களாக தமிழ் புத்தாண்டு தினத்தன்று (14/04/2019) அறிவித்தது. மயூரநாதன் ஐயா குருக்களாக இருந்து 12 வருடங்களாக எமது ஆலய வளர்ச்சிக்கு அரும்பாடு பட்டுள்ளார்

குருக்கள் வெற்றிடத்தை நிரப்புவதற்கான வேலைகள் பெப்ரவரி மாதத்தில் ஆரம்பித்தது.நேர்முக தேர்வுக்கு பின்னர் ஏப்ரல் மாதத்தில் ராதாகிருஸ்ணசர்மா பரமேஸ்வரசர்மா ஆலயத்தின் குருக்களாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

## ஆலய தகவல் தொடர்பு

ஆலய நிகழ்வுகளை அறிவிப்பதற்கு பல தகவல் தொடர்பு ஊடகங்களை பயன்படுத்துகிறோம்.

உதாரணமாகவானொலி,முகநூல்,மின்னஞ்சல்,இணையதளம்,ஆலய தொலைக்காட்சி, ஆலய அறிவிப்புக்கள் மற்றும் செய்தி மஞ்சரி. கடந்த ஒரு வருடமாக எமது தகவல் தொடர்புகளில் பல மாற்றங்களை கொண்டு வந்துள்ளோம்.

## சுகாதரம் மற்றும் பாதுகாப்பு

கடந்த இரண்டு வருடங்களாக திருப்பணிச்சபை சுகாதரம் மற்றும் பாதுகாப்பு விடயங்களின் முக்கியத்துவத்தை உணர்ந்து அதற்கு தேவையானவற்றில் கவனம் செலுத்தி வருகிறது. சுகாதரம் மற்றும் பாதுகாப்பு சபை பல நடவடிக்கைகளை அறிமுகப்படுத்தி அவற்றை அமுலாக்கி திருமுருகன் கோயிலுக்கு வரும்

அனைவரின் சுகாதரம் மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்த கடமைப்பட்டுள்ளார்கள்

கடந்த 12 மாதத்தில் திருப்பணிச்சபை கூழ்வரும் புதிய பூஜைகளை அறிமுகப்படுத்தி அதிகப்பட்ச பக்தர்களின் பங்களிப்புக்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்தியுள்ளது.

ஆங்கில புத்தாண்டு தினம் (01-01-19)108 கலச அபிஷேகம்

தமிழ் புத்தாண்டு தினம் (14-04-19) 108 சங்கு அபிஷேகம்

லலிதா சகஸ்ரநாம அர்ச்சனை - பூரணை தினத்தில்

மேலும் இக்கோயிலின் வளர்ச்சிக்கும் நமது சைவப்பணி தொடரவும் தொடர்ந்து உதவி செய்துவரும் தொண்டர்கள் அனைவருக்கும் எமது நிர்வாக சபையின் சார்பில் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம். மற்றும் தினசரி காலை மாலை பூசைகளையும் முக்கியமான வருடாந்த திருவிழாக்களையும் சிறப்பாகச் செய்து எமது கோயிலின் வளர்ச்சிக்காகப் பாடுபட்டுவரும் எமது ஆலய குருக்கள் அனைவருக்கும் எமது நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.


மேலும் இங்கு குறிப்பிடாத பலர் பல்வேறு வழிகளில் எமது ஆலயத்திற்கு ஒத்துழைப்பை வழங்கிய வண்ணம் உள்ளார்கள். அவர்கள் அனைவருக்கும் ஆலய நிர்வாக சபையின் சார்பில் நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்

நன்றி

வணக்கம்

மனோகரன் சுப்பிரமணியம்

தலைவர்


செயலை செய்வதற்கு மட்டுமே
உனக்கு அதிகாரம் உண்டு.
பலனில் ஒருபோதும் இல்லை.
பலன் என்பது இல்லவே இல்லை
என்றே எண்ணிக் கொள்.
பலனில் மீது ஆசை கூட
வைக்காதே. செயல் செய்வதில்
நம்பிக்கையின்மையும்
இருக்கக் கூடாது.
---பகவத் கீதை 2.47.